மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி

(தன்னாட்சி), பசுமலை, மதுரை – 625 004.

தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)

நடத்தும்

கருத்தரங்கம்

தலைப்பு

# பன்முகநோக்கில் தமிழ் இலக்கண, இலக்கியங்கள்

## நாள் : 07.04.2021

*******

கட்டுரையை பின்வரும் மின்னஞ்சல் மூலமாக சமர்ப்பிக்க வேண்டும்.

E mail: mtnc21tamilsf@gmail.com

தொடர்புக்கு:

94862 87464, 89405 21104,

90432 30500, 78457 77237

**கருத்தரங்கக் குழு**

**கருத்தரங்கப் புரவலர் மற்றும் தலைவர்**

**திரு. மூ. விஜயராகவன்,**
செயலர்,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை.

**முனைவர் பா. மனோகரன்,**
முதல்வர்,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை.

**முனைவர் க. அழகுசுந்தரம்,**
இயக்குநர்,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை.

**முனைவர் சீ. காயத்திரிதேவி,**
தமிழ்த்துறைத்தலைவர்,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை.

**முனைவர் தி. பரிமளா,**
தமிழ்த்துறைத்தலைவர் (சுயநிதிப்பிரிவு)
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை.

**ஒருங்கிணைப்பாளர்**

**முனைவர் இரா. கவிதா,**
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை, சுயநிதிப்பிரிவு
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை.

**இணை ஒருங்கிணைப்பாளர்கள்**

**முனைவர் ஆ. இராஜா**
உதவிப் பேராசிரியர்,

**திருமதி. சா.ரிஸ்வானா பர்வீன்**
உதவிப் பேராசிரியர்,

**திருமதி. மா. நாகலட்சுமி**
உதவிப் பேராசிரியர்,

**திரு. பூ. ஜோதிமுருகன்**
உதவிப் பேராசிரியர்,

**மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி (தன்னாட்சி)**

**தமிழ்த்துறை (சுயநிதிப் பிரிவு)**

வணக்கம் .....

மதுரை மாநகரில் கல்விப்பணியில் தலைசிறந்து விளங்கும் மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி தேசியத் தரமதிப்பீட்டுக் குழுவினரால் 'A ' தகுதிபெற்றுச் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரி தமிழ்நாடு நாயுடு மகாஜன சங்கத்தினரால் 1974 ஆம் ஆண்டு ஆகஸ்டு 18 ஆம்நாள் நிறுவப்பட்டது. கல்வி மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களும் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு இக்கல்லூரி தொடங்கப்பட்டது . இன்று இக்கல்லூரி மூவாயிரத்து ஐநூறு மாணவ, மாணவியர் பயிலும் அறிவாலயமாகத் திகழ்கிறது. கல்லூரி ஆட்சிக்குழு உறுப்பினர்களால் உருவாக்கப்பட்ட அறகட்டளையின் சார்பாக ஒவ்வொரு துறையிலும் கருத்தரங்கம், கண்காட்சி, நாடகம் மற்றும் கலை சார்ந்த பல நிகழ்வுகள் வருடந்தோறும் நடத்தப்பட்டுவருகின்றன.

இத்தகைய பெருமை வாய்ந்த மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியின் தமிழ்த்துறை சுயநிதிப்பிரிவானது தமிழ்மொழி மற்றும் தமிழ் இலக்கிய மேன்மையை உலகிற்கு எடுத்துரைக்கும் வகையில் பல்வேறு பொருண்மைகளில் பயிற்சிப்பட்டறைகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்தி வருகிறது. அந்த வகையில் தற்பொழுது **பன்முகநோக்கில் தமிழ் இலக்கண, இலக்கியங்கள்** என்னும் பொருண்மையில் கருத்தரங்கம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

சங்ககாலம் முதல் இக்காலம் வரை இலக்கண, இலக்கியங்கள் தோன்றித் தமிழுக்கு அணி செய்து வருகின்றன. தமிழ் இலக்கியங்களில்

காதல், வீரம், கல்வி, கொடை, புகழ், பக்தி, அரசியல், அறம், அறிவியல், பண்பாடு, பழக்கவழக்கங்கள், தொன்மங்கள் என சமூகம் சார்ந்த பல்வேறு பார்வைகளும் பதிவு செய்யப்பட்டிருப்பதை நம்மால் அறிய முடிகிறது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற வகைகளில் இலக்கண வளங்களும் செறிந்து காணப்படுகின்றன. நவீனக் கோட்பாடுகளும் புதியஅறிவுத்துறைகளும் ஊக்கம் பெற்றிருக்கின்ற இன்றைய சூழலில் தமிழின் பன்முகத் தன்மைகளையும் வெளிகொணரும் நோக்கில் இக்கருத்தரங்கமானது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே எங்களது முயற்சிக்கு கீழ்க்காணும் பொருண்மைகளில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் வழங்குமாறு அன்புடன் கேட்டுகொள்கிறோம்.

| | |
|---|---|
| **திணையியல்** | **எடுத்துரைப்பியல்** |
| **அறிவராய்ச்சியியல்** | **மார்க்சியம்** |
| **பெண்ணியம்** | **சூழலியல்** |
| **தலித்தியம்** | **சமூகவியல்** |
| **உளவியல்** | **மொழியியல்** |
| **பின்காலனியம்** | **தொன்மவியல்** |
| **குறியியல்** | **தத்துவவியல்** |
| **அமைப்பியல்** | **அரசியல்** |
| **இனவரைவியல்** | |
| **பின்அமைப்பியல்** | |
| **மானுடவியல்** | |
| **அழகியல்** | |
| **அறவியல்** | |
| **இறையியல்** | |

இவை போன்றும் ஏனைய பிற அணுகுமுறைகளைக் கொண்டும் தமிழ் இலக்கண, இலக்கியங்களை ஆய்வுசெய்து எழுதும் தரமான கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

**கட்டுரையாளர் கவனத்திற்கு**

அனைத்துத் துறைசார்ந்த கல்லூரி பேராசிரியர்கள், தமிழறிஞர்கள், ஆய்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் ஆகிய அனைவரிடமிருந்தும் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

ஆய்வுக்கட்டுரையைச் சொற்கோப்பில் (word document) A4 தாளில் 1.15 இடைவெளியுடன் ஏரியல் யுனிகோடு (Arial Unicode) எழுத்துருவில் கணினி வழி தட்டச்சு செய்து mtnc21tamilsf@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு **23.03.2021 ஆம்** தேதிக்குள் அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம். ஆய்வு தன்னளவில் முழுமையானதாக அமைய வேண்டும். ஆய்வுக் கட்டுரைகள் சொந்த முயற்சியில் உருவான புதிய மற்றும் அசல் கண்டடைவாக இருத்தல் வேண்டும். தலைப்பு, ஆய்வுச் சுருக்கம் மற்றும் நூற்பட்டியல் முதலியன தமிழிலும் ஆங்கிலத்திலும் அமைய வேண்டும். ஆய்வுக்கட்டுரைகளில் ஆய்வுமுறைப்படி குறிப்பு மற்றும் நூற்பட்டியல் இடம் பெற்றிருக்க வேண்டும்.

கருத்தரங்க நாளன்று ஆய்வாளர்கள் தங்களின் ஆய்வுக் கட்டுரைகளை கட்டாயம் வாசித்தளிக்கவேண்டும். கருத்தரங்கில் கலந்து கொண்டு கட்டுரை வாசிக்கும் அனைத்து ஆய்வாளர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்படும். ஆய்வு குறித்து பங்கேற்பாளர்கள் எழுப்பும் வினாக்களும் விவாதங்களும் கட்டுரையின் மீதான முதல்மதிப்பீடாக அமையும். அவற்றை அடிப்படையாகக்கொண்டு திருத்தியமைக்கப்பட்ட கட்டுரைகள் மின்னிதழில் வெளியிடுவதற்குப் பரிந்தனுப்பப்படும். அவ்வாறு பெறப்பட்ட கட்டுரைகள் **சர்வதேசத் தமிழ் ஆய்விதழின் (UGC – Care listed journal)** வல்லுநர் குழுவின் மதிப்பீட்டிற்கு உட்பட்டு வெளியிடுவதற்கு பரிந்துரைக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகள் மட்டுமே இணையத்தில் சிறப்பிதழாக வெளியிடப்படும். தேர்வு செய்யப்பட்ட கட்டுரையாளர்கள் வெளியீட்டுக் கட்டணமாக **ரூ.1500** செலுத்த வேண்டும். (ஆய்விதழில் வெளியிடுவதற்கான கட்டணம் பின்னர் பெறப்படும்)

கருத்தரங்கில் பங்கேற்கும் அனைவரும் கட்டாயம் பதிவுக்கட்டணம் மட்டும் செலுத்தித் தங்களின் பங்கேற்பை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

**கருத்தரங்கில் பங்கேற்க பதிவுக்கட்டணம்**
**ஆய்வாளர்கள்: - ரூ.100,**
**பேராசிரியர்கள் மற்றும் ஆர்வலர்கள்: - ரூ.200**

**பதிவுக்கட்டணம், செலுத்தவேண்டிய வங்கி விபரம்**

R. Kavitha
Assistant Professor,
Mannar Thirumalai Naicker College,
Account No : 20162807533
Branch : SBI, Pasumalai
IFSC CODE - SBIN 0002254
MICR CODE – 625002009

**********

**கட்டுரை மாதிரிவடிவம்**

https://drive.google.com/file/d/1T62DzdbcZzAsQC4_J7fETqqsYcwkggs7/view?usp=sharing